எந்தன் நாவில் புதுப்பாட்டு
எந்தன் இயேசு தருகின்றார் – 2

ஆனந்தம் கொள்ளுவேன்
அவரை நான் பாடுவேன்
உயிருள்ள நாள் வரையில் - அல்லேலுயா

எந்தன் நாவில் புதுப்பாட்டு
எந்தன் இயேசு தருகிறார்

1. பாவ இருள் என்னை
வந்து சூழ்ந்து கொள்கையில்
தேவனவர் தீபமாய் என்னைத் தேற்றினார்

ஆனந்தம் கொள்ளுவேன்
அவரை நான் பாடுவேன்
உயிருள்ள நாள் வரையில் - அல்லேலுயா

எந்தன் நாவில் புதுப்பாட்டு
எந்தன் இயேசு தருகிறார்

2. சேற்றில் வீழ்ந்த என்னையவர்
தூக்கியெடுத்தார்
நாற்றமெல்லாம் ஜீவரத்தம்
கொண்டு மாற்றினார்

3. இவ்வுலகப் பாடு என்னை
என்ன செய்திடும்
அவ்வுலக வாழ்வை காண
காத்திருக்கிறேன்

ஆத்துமாவே நன்றி சொல்லு
முழு உள்ளத்தோடே – என்

கர்த்தர் செய்த நன்மைகளை
ஒரு நாளும் மறவாதே – 2

என் ஆத்துமாவே நன்றி சொல்லு
முழு உள்ளத்தோடே

1. குற்றங்களை மன்னித்தாரே
நோய்களை நீக்கினாரே – 2
படுகுழியினின்று மீட்டாரே
ஜீவனை மீட்டாரே – 2

கர்த்தர் செய்த நன்மைகளை
ஒரு நாளும் மறவாதே – 2

என் ஆத்துமாவே நன்றி சொல்லு
முழு உள்ளத்தோடே

2. கிருபை இரக்கங்களால்
மணிமுடி சூட்டுகின்றார் - 2
வாழ்நாளெல்லாம் நன்மைகளால்
திருப்தி ஆக்குகின்றார் - 2

3. இளமை கழுகுபோல
புதிதாக்கி மகிழ்கின்றார் - நம்
ஓடினாலும் நடந்தாலும்
பெலன் குறைவதில்லை – நாம்

நீரே என் தஞ்சம்
நீரே என் கோட்டை
நீரே என் இரட்சகர்
நீரே ராஜா – 2

நான் உம்மை தேடுவேன் நாள் முழுதும்
நான் உம்மை சேவிப்பேன் வாழ் நாளெல்லாம்
எனது எல்லா வற்றிலும்
நான் உம்மை நேசிப்பேன் இயேசுவே – 2

1. இயேசுவே ராஜா இயேசுவே தேவன்
இயேசுவே மீட்பர் இயேசுவே – 2

வாக்களித்த அனைத்தையும் (விரைவில்)
என் வாழ்வில் நிறைறேற்றுவீர் - தகப்பன்

என் தேவையெல்லாம் நீர்தானையா
ஜீவனுள்ள நாட்களெல்லாம் - 2
இயேசையா இயேசையா – 2

வாக்களித்த அனைத்தையும்
என் வாழ்வில் நிறைறேற்றுவீர்

1. எதிர்கால ஏக்கமெல்லாம்
உம்மிடம் ஒப்படைத்தேன் நான் - என்
என் சார்பில் செயலாற்றுகிறீர்
எல்லாமே செய்து முடிப்பீர் - 2

என் தேவையெல்லாம் நீர்தானையா
ஜீவனுள்ள நாட்களெல்லாம் - 2
இயேசையா இயேசையா – 2

வாக்களித்த அனைத்தையும்
என் வாழ்வில் நிறைறேற்றுவீர்

2. பட்டப்பகல் போல என் நீதியை
விளங்கச் செய்வீர் - 2
நோக்கி அமர்ந்திருப்பேன்
உமக்காய் காத்திருப்பேன் - உம்மை

3. பாதத்தில் வைத்துவிட்டேன்
என் பாரங்கள் கவலைகள் - உம்
தள்ளாட விடமாட்டீர்
தாங்கியே நடத்தி செல்வீர் - என்னை

நான் உம்மை தேடுவேன் நாள் முழுதும்
நான் உம்மை சேவிப்பேன் வாழ் நாளெல்லாம்
எனது எல்லா வற்றிலும்
நான் உம்மை நேசிப்பேன் இயேசுவே – 2

நான் உன்னை விட்டு விலகுவதில்லை
நான் உன்னை என்றும் கைவிடுவதில்லை - (2)
நான் உன்னைக் காண்கின்ற தேவன்
கண்மணி போல் உன்னைக் காப்பேன் - (2)

நான் உன்னை விட்டு விலகுவதில்லை
நான் உன்னை என்றும் கைவிடுவதில்லை

1. பயப்படாதே நீ மனமே - நான்
காத்திடுவேன் உன்னை தினமே – 2
அற்புதங்கள் நான் செய்திடுவேன் - 2
உன்னை அதிசயமாய் நான் நடத்திடுவேன் - 2

நான் உன்னை விட்டு விலகுவதில்லை
நான் உன்னை என்றும் கைவிடுவதில்லை

2. திகையாதே கலங்காதே மனமே - நான்
உன்னுடனிருக்க பயமேன் - 2
கண்ணீர் யாவையும் துடைத்திடுவேன் - உன்
கவலைகள் யாவையும் போக்கிடுவேன் - 2

3. அனுதினம் என்னைத் தேடிடுவாய் - நான்
அளித்திடும் பெலனைப் பெற்றிடுவாய் - 2
அத்திமரம் போல் செழித்திடுவாய் - 2
நான் ஆசையாய் உண்ண கனி கொடுப்பாய் -2